செய்தி வெளியீடு எண்:546 நாள்:02.08.2021

## செய்தி வெளியீடு

திருப்பூர் மாவட்டம், தளி வாய்க்கால் வடபூதி நத்தம் கிராம நீரினைப் பயன்படுத்துவோர் நலச் சங்க பிரதிநிதிகளின் கோரிக்கையினை ஏற்று, பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தில் பாலாறு பழைய ஆயக்கட்டு பாசனமான தளி வாய்க்கால் பாசனப் பகுதிகளுக்கு திருமூர்த்தி அணையிலிருந்து 03.08.2021 முதல் 31.05.2022 வரை 700 மில்லியன் கன அடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிட்டுள்ளது. இதன்மூலம் திருப்பூர் மாவட்டம், உடுமலை வட்டத்திலுள்ள 2786 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9